**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 288/2013

**வழக்கு சாட்சி PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | கணவர் பெயர் | : ------- |
| தகப்பனார் பெயர் | குமாரசாமி | வயது | : 52 |
| கிராமம் | மேட்டூர் | நாள் | : 04.03.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

இன்று 04.03.2026 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் மேட்டூர் வட்டாட்சியர் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணி செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கிடைக்கபெற்ற சம்மனின் பேரில் மாவட்ட ஆட்சியர் கொடுத்தஅனுமிதி கடிதத்தின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். **அந்த அனுமதி கடிதம் சா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட சம்மனில் 1938 முதல் தற்போது வரையுள்ள கோல்நாயக்கன்பட்டி கிராம ச.எண்.65/10 ல் கண்ட சொத்து தொடர்பான ஆ–பதிவேடு, சிட்டா மற்றும் புலவரைபடம் ஆகியவற்றை கொண்டுவர தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி ச.எண்.65/10 ல் கண்ட சொத்திற்குண்டான ஆ–பதிவேட்டின் உண்மை நகல் கொண்டுவந்துள்ளேன். **அந்த ஆ–பதிவேட்டில் உண்மை நகல் மற்றும் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் சா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ச.எண்.65/10 ல் கண்ட சொத்திற்குண்டான புலவரைபடம் உண்மை நகல் கொண்டுவந்துள்ளேன். **அந்த புலவரைபடத்தின் உண்மை நகல் மற்றும் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் சா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சா.சா.ஆ–8 ன் அடிப்படையில் ஆ–பதிவேட்டில் ச.எண்.65/10 ஆனது கோ.கந்தகவுண்டர் என்பவர் பெயரில் இருந்துள்ளது. அதன் விஸ்தீரணம் 92 சென்ட் ஆகும். அது UDR சமயத்தின்போது ச.எண்.65/10 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டது. சம்மனில் கேட்கப்பட்ட 1938 முதல் 1972 வரையுள்ள சிட்டாவானது சென்னை எக்மோரில் அமைந்துள்ள ஆவண காப்பகத்தில் இருக்கும்.

<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

சா.சா.ஆ.8 ல் ச.எண்.65/10 ல் குறிப்பிட்டுள்ள கந்தகவுண்டர் சொத்தை வேறு யாருக்கேனும் விற்றிருந்தால் அவர்கள் பெயரில் வருவாய்ஆவணங்கள் மாறியிருக்கும் என்றால் சரிதான். தற்போது கோல்நாயக்கன்பட்டி கிராம ச.எண்.65/10 என்ற சர்வே எண் நிலையில் இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ–9 புலவரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறும் தற்போது சொத்து நிலையில் இல்லை என்றும், மேலும் பல உட்பிரிவுகள் செய்யப்பட்டு, உட்பிரிவுக்கு ஏற்றாற்போல் புலவரைபடமும் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)

<u>மறுவிசாரணை :–</u>

1938 க்கு பிறகு கந்தப்பகவுண்டர் பெயர் ச.எண்.65/10 ல் மாற்றப்பட்டுள்ளதா என்றால் 1972 ல் UDR க்கு பிறகு மாற்றப்பட்டுள்ளது, அதற்கு முன் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்று குறிப்பு இல்லை.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.